

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், 638 படித்த ஏழை பெண்களுக்கு திருமண நிதியுதவி மற்றும் திருமாங்கல்யத்திற்கு தலா 4 கிராம் தங்கமும் மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (22.09.2016) நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 661/2016 நாள்: 22.09.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத்திட்டத்தின் கீழ், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், 638 படித்த ஏழை பெண்களுக்கு ரூ.2 கோடியே 81 இலட்சம் திருமண நிதியுதவியும், 2.552 கி.கிராம் திருமாங்கல்யத்திற்கு தங்கமும் இன்று (22.09.2016) வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இன்றைய சமுதாயத்தில் ஆண்களுக்கு இணையாக பெண்களும் வாழ்வில் முன்னேற வேண்டும் என்று, பல்வேறு துறைகளின் வாயிலாக நலத்திட்ட உதவிகளும், ஊக்கத்தொகைகளும் வழங்கி வருகிறார்கள். குறிப்பாக பெண் கல்வி உயர்த்துவதற்காக சமூகநலத்துறை மூலம் படித்த ஏழை பெண்களுக்கு திருமணத்திற்கு திருமண நிதியுதவித்தொகையும், திருமாங்கல்யத்திற்கு 4 கிராம் தங்கமும் வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், பட்டதாரி அல்லாத 152 ஏழை பெண்களுக்கு திருமண நிதியுதவியாக தலா ரூ.25 ஆயிரமும், 486 பட்டதாரி ஏழை பெண்களுக்கு திருமண நிதியுதவியாக தலா ரூ.50 ஆயிரமும், திருமாங்கல்யத்திற்கு 4 கிராம் தங்கமும் என மொத்தம் 2.552 கி.கிராம் தங்கம் மற்றும் ரூ. 2 கோடியே 81 இலட்சத்திற்கான திருமண நிதியுதவிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (22.09.2016) வழங்கினார்.

பின்னர் மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயகுமார் எம்.பி. அவர்கள் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், ஆறாவது முறையாக தமிழ்நாடு முதலமைச்சராக பதவியேற்றவுடன், முதலில் 5 முக்கிய திட்டங்களில் கையெழுத்திட்டார்கள். குறிப்பாக பெண்களின் கல்வி ஊக்கப்படுத்துவதோடு, அவர்களது வாழ்வாதாரம் உயர்த்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு, ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த திருமாங்கல்யத்திற்கு 4 கிராம் தங்கம் வழங்கப்பட்டு வந்த திட்டத்தை மீண்டும் உயர்த்தி, 8 கிராமாக உயர்த்தி வழங்கப்படும் என தெரிவித்திருந்தார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 2011 முதல் 2016 வரை 15,265 பட்டதாரி அல்லாத ஏழை பெண்களுக்கு ரூ.38 கோடியே 16 இலட்சத்து 25 ஆயிரத்திற்கான காசோலைகளும், திருமாங்கல்யத்திற்கு 61.060 கி.கி தங்கமும், 12,485 பட்டதாரி ஏழை பெண்களுக்கு ரூ. 62 கோடியே 42 இலட்சத்து 50 ஆயிரத்திற்கான காசோலைகளும், திருமாங்கல்யத்திற்கு 49.940 கி.கி தங்கமும் வழங்கப்பட்டது.

மேலும், இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் 2015-16-ம் நிதியாண்டின்கீழ், 638 பயனாளிகளுக்கு (486 பட்டதாரிகள், 152 பட்டதாரி அல்லாத ஏழை பெண்கள்) ரூ. 2 கோடியே 81 இலட்சத்திற்கான நிதியுதவி (காசோலைகள் வங்கியின் வாயிலாக செலுத்தப்பட்டது). திருமாங்கல்யத்திற்கு 2.552 கி.கிராம் தங்கம் என மொத்தம் இதுவரை கன்னியாகுமரி மாவட்டத்தில் 28 ஆயிரத்து 388 பயனாளிகளுக்கு ரூ.103 கோடியே 39 இலட்சத்து 75 ஆயிரத்திற்கான திருமண நிதியுதவியும், 113.552 கி.கி தங்கமும் வழங்கப்பட்டது என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன், மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி எம்.எஸ். சாரதாமணி, தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய உறுப்பினர் திரு. ஏ. ஜஸ்டின் செல்வராஜ், மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி. கா. உமாமகேஸ்வரி அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றிய தலைவர் திருமதி. சாந்தி இசக்கிமுத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. முத்துகிருஷ்ணன், அரசு வழக்கறிஞர் திரு. ஞானசேகர், திரு. கனகராஜன், திரு. நாஞ்சில் சந்திரன் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.